ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

*சுற்றறிக்கை இலக்கம்: PS/EAD/Circular/4/2024* *எனது இலக்கம்: PS/EAD/04/44*
*2024 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி*

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள்,
சகல மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள்,
சகல ஆளுநர்களினதும் செயலாளர்கள்,
சகல அரசாங்க அதிபர்கள் / மாவட்ட செயலாளர்கள்,
சகல திணைக்களினதும் தலைவர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்,
ஏனைய சகல அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனப் பிரதானிகள் ஆகியோருக்கு.

**அரச மற்றும் பகுதியளவு அரச துறைகளின் வேலைவாய்ப்பு தொடர்பான தொகைமதிப்பு (2024 ஆம் ஆண்டு)**

அரச கொள்கை தயாரிப்பு மற்றும் திட்டமிடல் ஆகியவற்றுக்குத் தேவையான உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களைத் தயாரிப்பதற்குரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அரச மற்றும் பகுதியளவு அரச துறைகளின் வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காக நடாத்தப்படும் "அரச மற்றும் பகுதியளவு அரச துறை வேலைவாய்ப்பு தொடர்பான தொகைமதிப்பு" 2024 மே மாதம் 28 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

02. இம்முறை தொகைமதிப்பின் போது பின்வரும் வகைகளுக்குரிய அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களில் சேவையாற்றும் நிரந்தர, தற்காலிக, அமைய, ஒப்பந்த அடிப்படையில் கடமை புரியும் சகல தரத்தினையும் சேர்ந்த பணியாட்டொகுதியினர் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படும்.

மத்திய அரசின் கீழ் உள்ளடங்கும்

- அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள்
- நியதிச்சட்டச் சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச கம்பனிகள் உள்ளிட்ட பகுதியளவு அரச நிறுவனங்கள்
- அமைச்சுக்களின் கீழ் வராத நிறுவனங்கள்

மாகாண சபைகளின் கீழ் உள்ளடங்கும்

- மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண நியதிச்சட்டங்கள் மூலம் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் உள்ளிட்ட மாகாண அரச நிறுவனங்கள்
- மாகாண பகுதியளவு அரச நிறுவனங்கள்
- மாகாண சபைகளின் கீழ் உள்ள மாகாண அமைச்சுகளின் கீழ் வராத நிறுவனங்கள்

03. சகல நிரல் அமைச்சுக்கள், மாகாண பிரதம செயலாளர் செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான தொகைமதிப்பு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதுடன் சகல திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் போன்றே சகல கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள், பிரதேச செயலகங்கள், அமைச்சுகளின் கீழ் வராத சுயாதீன நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தாபன ரீதியான தொகைமதிப்பு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அந்த உத்தியோகத்தர்களின் உதவிகளைப் பெற்று தற்போது சகல அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் பட்டியல்கள்



ගාලු මුවදොර, කොළඹ 01.
காலி முகத்திடல், கொழும்பு 01.
Galle Face, Colombo 01.
දුරකථන / தொலைபேசி / Telephones: +94 (0) 11 2354418, +94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: +94 (0) 11 2446657
ඊ - තැපැල / மின்னஞ்சல் / E-mail: prsec@presidentsoffice.lk

தயாரிக்கும் பணிகள் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அவ்வாறே உங்களது நிறுவனம் மற்றும் உங்களுக்கு கீழ் உள்ள சகல நிறுவனங்களையும் உரியவாறு வழிநடாத்தி 2024 மே மாதம் 28 ஆம் திகதி முழுமையான பங்குபற்றலுடன், அரச மற்றும் பகுதியளவு அரச துறையின் வேலைவாய்ப்பு தொடர்பான தொகைமதிப்பை நடாத்துவதற்கு தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்துக்குத் தேவையான ஒத்துழைப்பு உங்களால் வழங்கப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

04. உங்களது நிறுவனத்தில் இந்த தொகைமதிப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது பற்றி தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகைமதிப்பு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்படும் என்பதுடன் உங்களது மேற்பார்வையின் கீழுள்ள நிறுவனங்களில் இந்த தொகைமதிப்பை நடாத்துதல் தொடர்பான பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் உங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தினால் உங்களுக்கு வழங்கப்படும் தொகைமதிப்பு ஆவணங்கள் யாவும், உங்களது மேற்பார்வையின் கீழுள்ள நிறுவனங்களுக்கு தொகைமதிப்புத் திகதிக்கு குறைந்தபட்சம் ஒரு வாரத்துக்கு முன்னர் கிடைக்கச் செய்தல் மற்றும் அந்த ஆவணங்கள் கிடைத்தமை பற்றி உறுதிப்படுத்துதல்.
ii. 2024 மே மாதம் 28 ஆம் திகதி உங்களது மேற்பார்வையின் கீழுள்ள நிறுவனங்களில் தொகைமதிப்புத் தகவல்களைச் சேகரிக்கும் பணிகள் சரியாகவும் வினைத்திறனுடனும் நடைபெறுவதை உறுதிப்படுத்துதல்.
iii. உங்களது மேற்பார்வையின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களும், மேலே 02 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஒவ்வொரு பணியாளரிடமிருந்தும் தகவல்களைப் பெற்று, இத்தொகைமதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துதல்.
iv. தொகைமதிப்பு தகவல்களை உரிய நேரத்தில் மற்றும் சரியாக வெளியிடுவதற்கு இயலுமானவாறு பூரணப்படுத்தப்பட்ட தொகைமதிப்பு வினாக்கொத்துக்கள் மற்றும் பொழிப்பு அறிக்கைகளை தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உரிய கால எல்லைக்குள் அத்திணைக்களத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

05. அரச மற்றும் பகுதியளவு அரச துறை வேலைவாய்ப்பு தொடர்பான அத்தியாவசிய அடிப்படைத் தகல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடாத்தப்படும் இந்தத் தொகைமதிப்புக்குரிய எல்லாச் செயற்பாடுகளையும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு உங்களது ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதை வலியுறுத்தும் அதே வேளை உரிய வேளைக்குரியதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததுமான இப்பணிக்காக முன்னுரிமை வழங்கி, இத்தொகைமதிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு உங்களது உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்கும்படி அறிவிக்கின்றேன்.

**ஒப்பம்.: ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க**
*சனாதிபதியின் செயலாளர்*

*தொலைபேசி: + 94 11 2354420 தொலைநகல்: + 94 11 2446657*
*மின்னஞ்சல்: prsec@presidentsoffice.lk*

*பிரதிகள்:*
*01. பிரதம அமைச்சரின் செயலாளர்*
*02. அமைச்சரவையின் செயலாளர்*
*03. கணக்காய்வாளர் தலைமையதிபதி*